# இலங்கை: பின்னோக்கிய இயல்பிலான படிமுறைகளினால் அச்சமும், திகைப்புமடைந்திருக்கும் நிபுணர்கள் புதுப்பிக்கப்பட்ட ஐ நா கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறார்கள்

ஜெனீவா (பெப்ரவரி 05, 2021) – ஜனநாயக நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக அண்மைய வருடங்களில் கடினமான போராட்டங்கள் மூலம் சாதித்துக் கொண்டிருக்கும் முன்னேற்றத்தைப் பின்னோக்கித் திருப்புவதற்கான முயற்சிகளை நிறுத்த வேண்டுமென்று இலங்கை அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டிருக்கும் ஐ நா மனித உரிமை நிபுணர்கள்குழு கடந்த கால குற்றச் செயல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறல் எடுத்து வரப்பட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்றும், சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்கள்.

2015 தொடக்கம் 2019 வரையில் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட 10 உத்தியோகபூர்வமான விஜயங்களையடுத்து முன்வைக்கப்பட்ட சுமார் 400 பரிந்துரைகள் தொடர்பாக அரசாங்கத்தின் தொடர் நடவடிக்கைகள் குறித்த மதிப்பீடொன்றை இந்த சுயாதீன நிபுணர்கள் இன்று வெளியிட்டார்கள். இலங்கையில் சுயாதீனமான மனித உரிமைகள் கண்காணிப்பை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மனித உரிமைகள் பேரவை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றும், கடந்த கால குற்றச் செயல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மைச் சமூகங்கள் ஆகியோருக்கு அச்சுறுத்தல் விடுத்து வரும் விதத்தில் அரசாங்கத்தின் அதிகரித்த அளவிலான பேரினவாத சொல்லாடல்களைச் சுட்டிக்காட்டும் அவர்கள் "நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்தும் விடயத்தில் பின்னோக்கிய போக்குகள் எழுச்சியடைந்து வருவதனையும், குடிமக்களுக்கான வெளி குறைவடைந்து வருவதனையும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முக்கியமான நிறுவன ரீதியான பாதுகாப்புக்கள், உயர் ஆணையாளரின் அறிக்கையில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் பலவீனமடைந்து வருவதனையும் பார்த்து நாங்கள் திகைப்படைந்துள்ளோம்" எனக் குறிப்பிடுகின்றார்கள்.

"2019 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் கொவிட் - 19 பெருந்தொற்று என்பன நாட்டின் மீது ஒரு பாரிய சுமையையெடுத்து வந்துள்ளன – எனினும், இந்த நெருக்கடிகள் தொடர்பான தேசிய பாதுகாப்பை மையமாகக் கொண்ட எதிர்வினை மற்றும் போர்க்குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டிருக்கம் தற்போது சேவையில் இருக்கும் மற்றும் முன்னைய இராணுவ ஆளணியினருக்கு நியமனங்கள் வழங்குவதனையும் உள்ளடக்கிய விதத்தில், சிவில் அரசாங்கக்கருமங்கள் இராணுவமயமாக்கப்பட்டு வரும் துரிதப்படுத்தப்பட்ட போக்கு அச்சுறுத்தலூட்டுவதாக இருந்து வருகின்றது" என இந்நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அத்தகைய எதிர்வினைகள், முக்கியமான நிறுவன ரீதியான பரீட்சிப்புக்கள் மற்றும் சமநிலைகள் என்பவற்றை நீக்கும் விதத்தில் அண்மையில் அரசியல் யாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 20ஆவது யாப்பு திருத்தத்துக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் இணைந்த விதத்தில் இலங்கையின் நிறுவனங்கள் மற்றும் நீதித்துறை என்பவற்றின் அப்பழுக்கற்ற தன்மை மீது ஒரு அச்சுறுத்தலை எடுத்து வந்துள்ளதுடன், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றுக்கு அத்தியாவசியமாக இருந்து வரும் பாதுகாப்புக்களைப் பலவீனப்படுத்தியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அரசாங்கம் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக் குறிக்கோள்களைச் சாதித்துக் கொள்ளும் விடயத்தை அதன் நிகழ்ச்சி நிரலில் முதன்மை ஸ்தானத்தில் வைத்துள்ளது. எவ்வாறிருப்பினும், ஒளிவுமறைவற்ற, வினைத்திறன் மிக்க, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பொறுப்புக் கூறக் கூடிய நிறுவனங்கள் இல்லாத நிலையில் வறுமையை முடிவுறுத்துதல், கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் என்பவற்றை முழுமையாக சாதித்துக் கொள்ள முடியாது (நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி குறிக்கோள் 16).

‘‘எமது விஜயங்கள் இடம்பெற்ற காலப் பிரிவுகளின் போது இலங்கையின் இயங்கியல் தன்மையுடன் கூடிய சிவில் சமூகத்திற்கான வெளி திறந்து விடப்படுவதனை நாங்கள் பார்த்தோம். ஆனால், இது மீண்டும் ஒரு முறை அதிகரித்த அளவில் மூடப்பட்டு வருவதுடன், பாதுகாப்பற்றதாகவும் இருந்து வருகின்றது’’ என அவர்கள் கூறியுள்ளார்கள். இது தொடர்பாக தேசிய பாதுகாப்பு சட்டவாக்கத்தைப் பயன்படுத்துவது கவலைக்குரியது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எந்தவொரு ஜனநாயக சமாதான சமூகத்திற்கும் முனைப்பான, சுயாதீனமான ஒரு சிவில் சமூகம் முக்கியமானது என்றும், அதிகாரிகள் குரலற்றவர்களின் குரல்களுக்குச் செவிமடுக்கும் விடயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்த நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

‘‘கொவிட் - 19 பெருந்தொற்றின் போது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், அமைப்புக்களில் இணைந்து கொள்ளல் மற்றும் சமாதானமாக ஒன்று கூடுதல் என்பன தொடர்பான சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமைகளின் மீது ஏற்றத்தாழ்வான விதத்தில் வரையறைகள் விதிக்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக சமூக ஊடக கருத்துரையாளர்கள் மற்றும் ஏனையவர்கள் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டார்கள்’’ என அந்த நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ‘‘2019 தொடக்கம் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், இதழியலாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் பாதுகாப்பு முகவரங்களினால் அதிகரித்த அளவிலான கண்காணிப்பு, துன்புறுத்தல், விசாரணை மற்றும் அச்சுறுத்தல் என்பவற்றை எதிர்கொண்டு வந்துள்ளார்கள் என்ற விடயம் தொடர்ச்சியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.’’

இனத்துவ மற்றும் சமய சிறுபான்மையினரும் - குறிப்பாக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோரும் - அதிகரித்த அளவில் புறமொதுக்கப்பட்டிருப்பதுடன், குறிப்பாகப் பெருந்தொற்று காலத்தில் களங்கத்துக்குட்படுத்தப்பட்டிருந்தார்கள் என்ற விடயத்தைக் குறிப்பிட்டுள்ள நிபுணர்கள், சிறுபான்மையினருக்கெதிராக பாரபட்சம் காட்டுதல் மற்றும் வன்முறை என்பவற்றைத் தூண்டக்கூடிய பேச்சுக்களைத்தடுத்து நிறுத்துவதில் அதிகாரிகள் தோல்வி கண்டிருப்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மேலும், சிறுபான்மை சமூகங்களின் சமய மற்றும் கலாசாரச் சடங்குகளுக்கு முரணான விதத்தில் கொவிட் - 19 சடலங்களைத் தொடர்ந்து கட்டாயமாக தகனம் செய்யும் நடவடிக்கை கவலைக்குரியதாகயிருந்து வருவதுடன், அது முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

‘‘இலங்கையில் ஆட்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களின் அளவு மற்றும் பாரதூரம் என்பவற்றுக்கு மத்தியிலும், இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றத்தை சாதித்துக் கொள்வதிலும், காணாமற்போயிருப்பவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதனை அடையாளம் காணுதல் அல்லது அவர்களுக்கு நேர்ந்திருக்கும் கதியை தெரிந்து கொள்ளல் மற்றும் குற்றம் இழைத்திருப்பவர்களைப் பொறுப்புக்கூற வைத்தல் என்பவற்றிலும் அதிகாரிகள் தோல்வியடைந்துள்ளார்கள்’’ என அவர்கள் கூறினார்கள்.

காணாமற் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான அலுவலகம் என்பவற்றின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் ஒரு வித்தியாசமான அணுகுமுறையையும், நிச்சயமற்ற தன்மையையும் எடுத்துக்காட்டி வந்திருக்கும் நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்கள் ஆகியோருக்கு மத்தியில் துயரும், பதற்ற நிலையும் அதிகரித்துள்ளது. மேலும், உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை கோரி நிற்கும்

போர் விதவைகள் மற்றும் காணாமற் போனவர்களின் பெண் உறவினர்கள் ஆகியோரும், அதே போல், அவர்கள் சார்பில் பரப்புரை செய்து வரும் பெண் செயற்பாட்டாளர்களும் குறிப்பாக அபாயங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்வதனையும் உள்ளடக்கிய விதத்தில் சித்திரவதையைத் தடை செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் பெருந்தொகையான பரிந்துரைகள் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லையென நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சிறைச்சாலை சீர்திருத்தம் அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டிருப்பது போல் தெரிகின்றது. ஆனால், மூல காரணங்கள் இதுவரையில் கவனத்திலெடுக்கப்படவில்லை. மேலும், ஆட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் நிலைமைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கொடூரமானவையாகவும், மனிதாபிமானமற்றவையாகவும், இழிவான விதத்தில் ஆட்களை நடத்தக் கூடியதாகவும் இருந்து வருகின்றன. தடுப்புக் காவல் மரணங்கள், கடத்தல் மற்றும் சித்திரவதை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து பரவலாக எழுந்து கொண்டிருக்கின்றன.

தண்டனை விலக்கீட்டு உரிமையைக் கவனத்திலெடுக்க அரசாங்கம் தவறியிருக்கும் நிலை பெருமளவுக்கு கவலைக்குரிய விடயமாகயிருந்து வருவதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ''இலங்கையில் நெடுகிலும் தண்டனை விலக்கீட்டு உரிமை தங்குதடையின்றி நிலவிவந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கு எதிராக பழிவாங்கல்கள் இடம்பெற முடியும் என்ற அச்சத்துடன் இணைந்த விதத்தில் வினைத்திறன் மிக்க புலனாய்வுகள் மற்றும் வழக்குத்தாக்கல் செய்தல்கள் என்பன இல்லாதிருக்கும் நிலை, உடைக்கப்பட வேண்டிய தண்டனை விலக்கீட்டுச் சுழல் ஒன்று உருவாகுவதற்கு வழிகோலியுள்ளது'' என 2009 பெப்ரவரி மாதத்தில் ஐ நா நிபுணர்கள் 10 பேரின் மற்றொரு தொகுதி எடுத்துக் காட்டியிருந்தது.

''அறியப்பட்டிருக்கும் நோய்க்குறி 12 ஆண்டுகளுக்கு பின்னரும் அதே விதத்திலிருந்து வருவது மிகக் கடுமையான மன வருத்தத்தை அளிக்கின்றது'' என 2021 தொடர்பான தமது மதிப்பீட்டில் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ''ஒன்றுடனொன்று சம்பந்தப்படாத மற்றும் எத்தகைய பின்விளைவுகளையும் எடுத்து வர முடியாத விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பான இலங்கையின் நீண்ட வரலாறு, அத்துமீறல்களை உண்மையில் நிவர்த்தி செய்வது தொடர்பான அரசாங்கத்தின் திடசங்கற்பம் குறித்த அவநம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் வழிமுறைகள் எவையேனும் முன்னேற்றத்தையெடுத்து வரும் என்பது குறித்தோ அல்லது ஓரளவிலான நம்பகத்தன்மையை சாதித்துக் கொள்ளும் என்பது குறித்தோ சிறு அளவிலான நம்பிக்கை மட்டுமேயிருந்து வருகின்றது.

''இந்தப் பின்புலத்திலேயே இலங்கைக்கான எமது விஜயங்களின் அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை அமுல் செய்வதற்கான ஓர் அவசரத் தேவை தோன்றியுள்ளது என்ற விடயத்தை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். அந்தப் பரிந்துரைகள் நியாயமானவையாகவும், உயர் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் இருந்து வருகின்றன. இலங்கையில் மனித உரிமைகள் நிலவரத்தை உயர் மட்ட கண்காணிப்பின் கீழ் வைத்திருக்குமாறும், மேலும் சர்வதேச பொறுப்புக்கூறல் வழிமுறைகளுக்கு ஊடாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் நாட்டில் பொறுப்புக்கூறல் நிலையை மேம்படுத்துவதற்கான அனைத்து சாத்தியமான தெரிவுகளையும் கண்டறியுமாறும் நாங்கள் ஐ நா மனித உரிமைகள் பேரவையிடமும், சர்வதேச சமூகத்துடனும் கேட்டுக் கொள்கின்றோம்.''

எனவே, இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான நிலைமையை சுயாதீனமான முறையில் கண்காணித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றை மனித உரிமைகள் பேரவையும், உறுப்பு அரசுகளும் பலப்படுத்த வேண்டுமென அவர்கள் தெரிவித்தார்கள். அத்துடன், புலன் விசாரணைகள், தகவல் தொகுப்பு மற்றும் தகவல் பகுப்பாய்வு என்பவற்றின் மூலம் பல்வேறு

ஐ நா பொறிமுறைகளினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு பக்கச்சார்பற்ற, சுயாதீனமான, சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

முடிவு

***நிபுணர்கள்: எம். கிளெமன்ட் வோல்வ்*** *(டோகோ) அமைதியாக ஒன்று கூடுதல் மற்றும் அமைப்புக்களில் இணைந்து கொள்ளல் என்பவற்றுக்கான சுதந்திரத்துக்கான உரிமைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர், வலிந்து அல்லது சுய விருப்புக்கு மாறான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல்கள் தொடர்பான ஐ நா செயற்குழு:* ***திரு: தாஏ – உங் பயிக்*** *(தலைமை அறிக்கையாளர்)*, ***திரு. ஹென்றிகாஸ் மிகேவிசெஸ்*** *(உப தலைவர்),* ***திருமதி அவுவா போல்ட், திரு. பேர்னார்ட் டுஹயிம்*** *மற்றும்* ***திரு. லுசியானோ ஹாஸன்,*** *தன்னிச்சையான தடுத்து வைப்புக்கள் தொடர்பான ஐ நா செயற்குழு:* ***திருமதி லேய் டூமே*** *( தலைமை அறிக்கையாளர்),* ***திருமதி எலீனா ஸ்டினர்ட்*** *(உப தலைவர்),* ***திருமதி மிரியம் எஸ்டார்டா – கஸ்டிலோ, திரு. மும்பா மலீலா, திரு. சியொங் - பில் ஹொங்,*** *நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோரின் சுயாதீனம் தொடர்பான விசேட அறிக்கையாளர்* ***திரு. தியாகோ கார்சியா – சயான்***, *சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர்* ***திரு. பெர்னான்ட் டி வரென்ஸ்,*** *சமயம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் தொடர்பான விசேட அறிக்கையாளர்:* ***திரு அஹ்மட் சஹீட்,*** *பயங்கரவாதத்தை முறியடிக்கும் பொழுது மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் என்பவற்றை மேம்படுத்தி, பாதுகாப்பதற்கான விசேட அறிக்கையாளர்* ***திருமதி பியோனலா நி ஓலயின்,*** *சித்திரவதை, ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற செயல்கள் அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை அளித்தல் தொடர்பான விசேட அறிக்கையாளர்:* ***திரு நில்ஸ் மெல்ஸர்,*** *உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பவற்றை மேம்படுத்துவதற்கான விசேட அறிக்கையாளர்* ***திரு. பேபியன் சல்வியோலி.***

***விசேட அறிக்கையாளர்கள், மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள் (Special Procedures) என அறியப்படும் கட்டமைப்பின் ஒரு பாகமாக இருந்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் முறைமையின் சுயாதீன நிபுணர்களைக் கொண்ட மிகப் பெரிய தொகுப்பாக இருந்து வரும் விசேட நடைமுறைகள், பேரவையின் சுயாதீனமான, உண்மைகளைக் கண்டறியும் மற்றும் கண்காணிக்கும் பொறிமுறைகளைக் குறிப்பிடுவதற்கென பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு பொதுவான பெயராகும். இப்பொறிமுறைகள் ஒன்றில், குறிப்பிட்ட ஒரு நாட்டில் நிலவி வரும் நிலைமைகளைக் கவனத்தில் எடுக்கின்றன் அல்லது உலகில் அனைத்துப் பாகங்களிலும் நிலவி வரும் வெவ்வேறு தலைப்புக்களிலான பிரச்சினைகளைக் கவனத்திலெடுத்து வருகின்றன. விசேட நடைமுறைகள் நிபுணர்கள் தொண்டு அடிப்படையில் பணியாற்றி வருவதுடன், அவர்கள் ஐ நா அமைப்பின் ஊழியர் அணியைச் சேர்ந்தவர்களாக இருந்து வரவில்லை. அத்துடன், தமது வேலைக்கென அவர்கள் எத்தகைய ஊதியத்தினையும் பெற்றுக்கொள்வதில்லை. எவையேனும் அரசாங்கம் அல்லது நிறுவனம் என்பவற்றிலிருந்து சுயாதீனமானவர்களாக அவர்களிருந்து வருவதுடன், தமது சொந்தப் பொறுப்பின் கீழ் பணியாற்றி வருகின்றார்கள்.***

***தொனிப்பொருள் சார்ந்த விசேட நடைமுறைககள், ஒப்பந்த அமைப்புக்கள் மற்றும் அகிலம் தழுவிய பருவகால மீளாய்வுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய ஐ நா மனித உரிமைகள் பொறிமுறைகளினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட ஒரு நாடு தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் / அல்லது பரிந்துரைகள் என்பவற்றை அகிலம் தழுவிய மனித உரிமைகள் சுட்டெண்ணில் பார்க்க முடியும்:*** https://uhri.ohchr.org/en/

*மேலும் தகவல்கள் மற்றும்* ***ஊடக வேண்டுகோள்கள்*** *தொடர்பாக, தயவு செய்து திருமதி பெடெரிகா டொனாட்டி அவர்களைத் தொடர்பு கொள்ளவும். (fdonati@ohchr.org/+41 79 444 4506).*

*ஏனைய ஐ நா சுயாதீன நிபுணர்கள் தொடர்பான ஊடக விசாரணைகளுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: ரினோடொ டி சூசா (+41 22 928 9855 / rrosariodesouza@ohchr.org), ஜெரமி லோரன்ஸ் (+ 41 22 917 7578 / jlaurence@ohchr.org)*

*ஐ நா சுயாதீன மனித உரிமைகள் நிபுணர்கள் சம்பந்தப்பட்ட செய்திகளை ட்விட்டரில் பெற்றுக் கொள்ளவும் Twitter: @UN_SPExperts.*

*நாங்கள் வாழ்ந்து வரும் உலகம் தொடர்பாக அக்கறை கொண்டுள்ளீர்களா?*
***அப்படியானால் எவரேனும் ஒருவரின் உரிமைகள் தொடர்பாக இன்று குரல் எழுப்புங்கள்.***
*#Standup4humanrights*
*இணையதள பக்கத்தை பார்க்கவும் http://www.standup4humanrights.org*